RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1334

OPEN ACCESS

# இலக்கியத் தொழில்நுட்பக் கோட்பாட்டு நோக்கில் சிறுபஞ்சமூல கருத்துக்கள்

**மு. ஜோதிலட்சுமி [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# The Cirupancamulam (Didactic) Ideas from the point of view of the Theory of Literary Technology

**M. Jothilakshmi [a, *]**

[a] Department of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: lec.jothilakshmi@gmail.com

Received: 16-06-2022
Revised: 14-08-2022
Accepted: 19-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

The theme of this paper is that theories from the point of view of poetic structure should be sought to be examined in classical literature from a linguistic point of view. On that basis, it is a book that gives justice to the lives of the people through Cirupancamulam. When examining only one song, the foundation of this is the work of penetrating the secrets of creation by highlighting word count, word choice, and phonetic structure. The purpose of this article is to express the inherent aesthetic elements of the author in the language, rather than to confine itself to the understanding of the meaning of a verse. This article seeks to explore a lyrical way in Cirupancamulam using S.V. Shanmugam Sir's poetic structural elements.

**Keywords:** Cirupancamulam, Structural Elements, Aesthetic Elements, Phonetic Structure

## முன்னுரை

பண்டைத் தமிழ் மரபில் மேலோங்கி இருந்த கோட்பாட்டு நுட்பங்களை இக்கால மொழியியல் கூறுகளுடன் இணைத்து ஆராய்வது இலக்கியத் தொழில்நுட்பத் திறனாய்வு (literary technological criticism) எனப்படும்.

ஒரு பாடலை ஆராயும்போது, சொல் எண்ணிக்கை சொல் தேர்வு; ஒலிக் கட்டு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி படைப்பின் ரகசியங்கள் ஊடுருவும் பணியே, இதன் அடித்தளம் ஆகும். இதன் வழி ஒரு செய்யுளை அதன் பொருள் அறியும் நிலையில் நின்று விடாமல், ஆசிரியரின் உள்ளார்ந்த அழகியல் கூறுகளை மொழியில் நோக்கில் வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். செ.வை.சண்முகம் ஐயாவின் கவிதைக் கட்டமைப்பு கூறுகளை அடித்தளமாகக் கொண்டு சிறுபஞ்சமூலத்தில் ஒரு பாடல் வழி இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## சிறுபஞ்ச மூலம் அமைப்பியல்

இலக்கியச் செய்யுள் வகையே உயர்ந்த இலக்கியமாக கருதப்படுகிறது. அவற்றுள் நீதிநூல்கள் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கிறது. நன்மை செய்வதால் அடையும் பயனும், தீமை செய்வதால் கிடைக்கும் விளைவுகளையும், சான்று பகர்கிறது தமிழ் மருத்துவத்தில் நோய்களைத் தீர்ப்பதற்கு கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களைச் சேர்த்து

நோய் தீர்ப்பது போல, ஐந்து விடயங்கள் மூலம் நீதியை போதிக்கிறது. "இந்நூல் காரியாசான் என்ற சமணப்புலவரால் நான்கு அடிகளால் அமைந்த 102 பாடல்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது" (Manickam, 2007). இதனுடைய செய்யுள் அமைப்புகளை ஒரே ஒரு பாடலை மட்டும் எடுத்துக்கொண்டு, அதன் கூறுகளை மொழியியல் நோக்கில், ஒலி, சொல், பிணை,கருத்தன், வாக்கியம், மொழி இணைவு என்ற தளத்தில் ஆராய இக்கட்டுரை முற்படுகின்றது.

## ஒலி

மொழிக்கு ஒலியே அடிப்படை. ஒலிக்கு வடிவம் கொடுத்த பொழுது எழுந்ததே எழுத்து ஆகும்.

## சொல்

சொல், வடிவமும், பொருளும் உடையது.அது உருபனையும் பகாப்பதமாக.வருகிற அடிச்சொல்லையும், ஒட்டுக்களையும், வார்த்தையையும், பகுபதத்தையும் கொண்டது. "வார்த்தையின் அமைப்பை விளக்குவதே சொல்லியல்" ஆகும் (Sanmugam, 1998).

## வாக்கியம்

சொல்லமைப்பு வாக்கியம் எனப்படும். வாக்கியங்களுக்கு இடையே உள்ள மொழித் தொடர்பு "மொழி இணைவு" எனவும கருத்துத்தொடர்பு "கருத்து இணைவு" எனவும், பனுவல்ஆய்வில், கருத்தாடல் எனவும், ஆய்வாளர்களால் ஆராயப்படுகிறது.வாக்கியங்கள் செய்யுள் ஆய்வில், அடி, கருத்தன், பாடல் என்ற வரிசைமுறையில் ஆராயப்படுகின்றது.

## பிணை

ஓசை மற்றும் இடைவெளி (நிறுத்தம்) ஆகும். அஃதாவது, ஓசை உணர்ச்சியின் மூலமே பாடலில், அலகுகளைப் பிரித்து உணர்கிறோம். என்ற அடிப்படையில் , "பிணை" என்ற புதிய உறுப்பை முன்மொழிந்துள்ளார்.

இவ்விதம் ஒலி, சொல், வாக்கியம், பிணை, கருத்தன் என்ற அமைப்பில் சிறுபஞ்சமூலத்தில் இருந்து. (கட்டுரையின் பக்க வரையறையைக் கருத்தில் கொண்டு).

ஒரு பாடலை மட்டும் சான்றாக

"வைப்பானே வள்ளல்; வழங்குவான் வாணிகன்;

உய்ப்பானே ஆசான்; உயர்கதிக்கு உய்ப்பான்

உடம்பின் ஆர் வேலி ஒருப்படுத்து

ஊண் ஆரத்

தொடங்கானேல் சேறல் துணிவு"

என்ற இப்பாடலின் பொருள் யாதெனில், பொருளை ஈட்டி வைப்பவன் வள்ளல் .அப்பொருளைப் பிறருக்கு கொடுப்பவன் வாணிகன். ஒருவனை மேலானப் பதவிக்கு உயர்த்துபவன் ஆசிரியன். உடல் ஒழுக்கத்தால், உயிர்களைக் கொன்று புலால் உண்ணாதவன் உயர்கதிக்குச் செல்வான் என்பது இப்பாடலின் பொருளாகும் (Manickam, 2007).

இப்பாடலை, கவிதை கட்டமைப்பு நோக்கில் மொழியியல் தளத்தில் ஆராயும் பொழுது,

"வைப்பானே வள்ளல்

உய்ப்பானே ஆசான்"

என்ற முதல் இரண்டு அடிகளில் னகர மெய் ஏகாரமாக நின்று ஓசைநயம் புலப்படத் துணை செய்கின்றது (Manickam, 2007).

## சொல்தேர்வு

வைப்பான், வள்ளல், வழங்குவான், வாணிகன், ஆசான், உயர்கதி, உடம்பு, ஊன், சேறல், துணிவு என்ற பத்து சொற்கள் பொருள் வெளிப்படத் துணை நிற்கின்றன. வைப்பான், உய்ப்பான் என்ற இரு சொற்களும் உயர்திணை தொழிற் பெயர்கள் ஆகும். வினை ஏற்று வரும் இத்தொழில் பெயர்களால், கொடுப்பதால் ஏற்படும் உயர்வு அறியமுடிகின்றது.

இவ்விதம், சொல் தேர்வு ஆசிரியர் கூறவரும் கருத்திற்கு அழகியலாக நிற்பதை அறிய இயலுகின்றது. மேலும், வள்ளல், வாணிகன், ஆசான், முனிவன் என்ற சமூகத்தில் உயர்ந்த மதிப்பு பெறுபவர்களின் இயல்பை எடுத்துரைப்பதில் இச்சொல், தேர்வே முக்கியப் பங்கு வகிக்கிறது (Manickam, 2007).

## ஒலிக்கட்டு

யாப்பு நோக்கில், வைப்பான், என்ற முதல் அடியும், உய்ப்பான் என்ற இரண்டாம் அடியில் அடி எதுகையும், உய்ப்பான், உயர், உய்ப்பான் என்ற மூன்று சீர்களிலும் இரண்டாம் அடியில் சீர்மோனையும், இயைபுத் தொடரும், பெற்று விளங்குகின்றது. பாடல் முழுவதும் செப்பலோசை பெற்று வெண்பாவின் இலக்கணத்துடன் திகழ்கின்றது.

## பிணை

ஓசை இடைவெளியை உணர்த்தி நிற்பதே 'பிணை' ஆகும்.

இப்பாடல் வரிகளில்,

"வைப்பானே வள்ளல்

வழங்குவான் வாணிகன்

உய்ப்பானே ஆசான்"

என்ற மூன்று அடியிலும் தொடர்பொருள் ஓசைநயம் ஒரு சேர வரும் பொழுது உயர்கதிக்கு ஒருப்படுத்து என்ற இரு சொற்கள் மட்டும் ஓசை இடைவெளியாய் இரண்டாம் மற்றும் மூன்றாம் அடிகளில் நின்று வருவதே பிணை ஆகும். இது ஒலி அழுத்தம் என்று அழைக்கப்படுகிறது. பொருளை ஆழமாக உணர்த்த வரும் இடைவெளியாக இங்கு இது பயன்படுத்தப்பட்டுள்ளது (Manickam, 2007).

## கருத்தன்

ஆசிரியர் கூறவரும் கருத்துகளுக்கு இடையே ஏற்படும் இனணவு "கருத்தன்" எனப்படும் (Sanmugam, 1998). முதல் மூன்று அடிகளில் சேமித்தல், வழங்குதல், உயர்த்துதல், என்ற மூன்று நிலைகளில் சேமித்தல், வள்ளல் தன்மை மற்றும் உயர்த்துதல் ஆகியவை மூன்று நிலைகளில் மற்றவர்களையும் சார்ந்து நிற்கும் பிறவினை கருத்தலகுகளாகவும் உடல் ஒழுக்கம், உயிர் கொல்லாமை ஆகியவை தனிமனித கட்டுப்பாட்டு நிலையில் தன் வினை என்ற நிலையில், இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

## மொழி இணைவு

னகர ஈற்றுச் சொல் ஏகாரமாக நின்று, செய்படுபொருளில் "வைப்பானே வள்ளல் வழங்குவானே வாணிகன்", என்று மொழி இணைவிற்கு வித்திடுகின்றன (Manickam, 2007).

இவ்விதம் ஒரே ஒரு பாடலை மட்டும் விரித்து ஆராய்ந்ததில் பல்வேறு இலக்கணக் கூறுகளை மொழியியல் தளத்தில் அறிய இயலுகிறது என்றால் நுணுகி ஆராய வேண்டிய செய்யுள் பாடல்கள் அதிகம். பெற வேண்டிய கலை அழகியல் அதிகம் என்பதை உணர இயலும்.

## முடிவுரை

ஒலிநயம், சொல் தேர்வு, ஒலிக்கட்டு முதலிய எழுத்தியல் கூறுகளே பாடலின் பொருளை உய்த்துணர வழிவகுக்கின்றது. பிணை என்ற சொல் வடிவம் புதிதெனினும், ஓசை இடைவெளி அல்லது ஒலி அழுத்தம் செய்யுளில் எந்த அடியில் நிறைவுறுகிறது, எந்த அடியில் தொக்கிநிற்கின்றது. என்ற வேறுபாட்டை அறிய வித்திடுகிறது. கருத்தன் என்பது பொதுநிலையில் பெறப்படும் கருத்து அல்ல; கருத்துக்களை இணைக்க வேறுபடுத்த உதவும் அலகுகளே கருத்தன் ஆகும். உயர்ந்த பொருளை இச்செய்யுள் எடுத்துரைக்க கருத்தன்களே துணை செய்கின்றன. மொழி இணைவிற்கு எந்தவொரு எழுத்தியல் கூறுகள் வித்திடுகின்றன என்பதை ஆராய இயலுகின்றது. இவ்விதம் செய்யுள் பாடல்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்வதால், மொழிப் பயன்பாட்டில், புதுக்கூறுகளை அவற்றின் அழகியலை, பாடலின் பொருளை விரித்து ஆராய கவிதை கட்டமைப்பு தளத்தில் இத்தொழில்நுட்பத் கோட்பாட்டு முறை அவசியமாகின்றது.

## References

Manickam, A. (2007) Sirupancha Moolam, Vardhamanan Pathippagam, Chennai, India.

Sanmugam, S.V. (1998) Ilakkiyamum Mozhi Amaipum Iyalbugal, Paavai veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License